**சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்**

முன்னிலை **திரு.S.பாஸ்கரன், M.A., LLM.,**

சார்பு நீதிபதி, ஆரணி,

2025–ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 01ஆம் நாள் திங்கட்கிழமை

**IA.No.1/2022 in OS.No.295/2021**

**TNTM 03000582/2021**

N.கந்தசாமி ... மனுதாரர்/வாதி

/எதிராக/

1. S.N.தேவராஜ்
2. D.வசந்தி
3. D. ராதிகா
4. D. பூர்ணிமா
5. D. கோடீஸ்வரி
6. C. சிந்தாமணி
7. D. ரோஸ் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் 1 முதல் 8
8. R. மணிகண்டன்
9. சேகர்
10. ஆனந்தன் ... உத்தேச தரப்பினர்கள் 9 மற்றும் 10

இம்மனு என் முன்பாக 07.11.2025 அன்று விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.நாராயணன்,B.A.B.L., அவர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.R.ராஜன்,M.A.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், 8ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.D.சந்திரசேகரன்,B.A.,B.L., திரு.R.கணேசன்,B.A.,LL.B., ஆகியோர்கள் முன்னிலையாகியும், 6ம் எதிர்மனுதாரர் இறந்தார், 7, 9, 10 எதிர்மனுதாரர்களை இந்நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரின்மையால் ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையிலும், இருதரப்பு வாதுரைகளை கேட்டும், சான்றாவணங்களை பரிசீலித்தும், இது நாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

அசல் வழக்கில் இறந்துபோன 6ம் பிரதிவாதியின் வாரிசுகளை இவ்வழக்கில் உத்தேச தரப்பினர்/பிரதிவாதிகளாக சேர்க்க அனுமதிவேண்டி இம்மனு உரிமையியல் விசாரணை நடைமுறை சட்டம் கட்டளை 1 விதி 10 மற்றும் 151 சி.பி.சி–ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்:–**

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் வாதி ஆவார். அசல் வழக்கை 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கு எதிராக 'D' அட்டவணை சொத்தை பொறுத்து விளம்புகை பரிகாரம் வேண்டியும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டியும், மனுதாரர் தாக்கல் செய்துள்ளார். 6 முதல் 8 பிரதிவாதிகள் வழக்கிற்காக தரப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளார்கள். அசல் வழக்கில் 6ம் பிரதிவாதிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்ட நிலையில், 6ம் பிரதிவாதி இறந்துவிட்டதாக அழைப்பாணை திரும்பி உள்ளது. இறந்து போன 6ம் பிரதிவாதியின் வாரிசுகளான இம்மனுவில் குறிப்பிட்டுள்ள 9 மற்றும் 10 எதிர்மனுதாரர்கள் 6ம் பிரதிவாதியின் மகன்கள் ஆவார்கள். 6ம் பிரதிவாதி வாங்கிய சொத்தை அவர்கள் அனுபவம் செய்து வருகிறார்கள். 9 மற்றும் 10 எதிர்மனுதாரர்கள் இந்த வழக்கிற்கு உரிய தரப்பினர்கள் ஆவார்கள். எனவே அசல் வழக்கில் மேற்படி இருவரையும் தரப்பினராக சேர்க்க இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இம்மனு அனுமதிக்காமல் போனால் மனுதாரருக்கு பெருத்த இழப்பு ஏற்படும் என்று கூறி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையை 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள் ஏற்றுக்கொண்ட எதிருரையின் சுருக்கம்:–**

மனுதாரர் பரம் மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. மனு அபிடவிட் சங்கதிகள் யாவும் உண்மையல்ல. மேற்படி நெம்பர் வழக்கில் 6ம் பிரதிவாதி சிந்தாமணி 08.09.2021ல் இறந்துவிட்டார். அவருக்கு சட்டப்படி வாரிசு மனு போடாமல் அவருடைய வாரிசுகளை தாவாவில் 9, 10 பிரதிவாதிகளாக சேர்க்க வேண்டும் எனக் கோரி தாக்கல் செய்த மனு சட்டப்படி ஏற்கக் கூடியதல்ல. மேற்படி நெம்பர் தாவா தாக்கல் செய்வதற்கு முன்பே 6ம் பிரதிவாதி இறந்து உள்ளார் என விவரம் தெரிந்தும் அவர் மீது தாக்கல் செய்யப்பட்ட இந்தாவா செல்லாத ஒன்றாகிறது. மேலும் 6ம் பிரதிவாதியின் வாரிசுகளை குறிப்பிட்ட காலத்தில் சேர்க்காமல் விட்டுவிட்டு தற்போது குறுக்கு வழியில் அவர்களை தாவாவில் தரப்பினராக சேர்க்கவேண்டும் எனக்கோரி தாக்கல் செய்யப்பட்ட ஆர்டர் 1 ரூல் 10 சி.பி.சி. மனு சட்டப்படி ஏற்க்க கூடியதல்ல. மேற்படி நெம்பர் வழக்கை நடத்த விடாமல் செய்ய வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் தாக்கல் செய்யப்பட்ட இம்மனு ஏற்க்க கூடியதல்ல. எனவே. மனுதாரர் மனுவை எதிர்மனுதாரர் செலவுடன் தள்ளுபடி செய்யுமாறு எதிருரை தாக்கல்

செய்துள்ளார்.

3. **எதிர்மனுதாரர்/8-ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்:-**

மனுதாரர் ஆனவர் 6ம் பிரதிவாதி இறந்துவிட்ட நிலையில் அவர்களின் சட்டபடியான வாரிசுகளை மேற்படி வழக்கில் சேர்க்க சட்டப்படி கட்டளை 22 விதி 4 சி.பி.சி-ன் படி தாக்கல் செய்யாமல் கட்டளை 1 விதி 10 சி.பி.சி-ன் படி மனு தாக்கல் செய்திருப்பது சட்டத்திற்கு புறம்பானவை. இந்நெம்பர் எதிர்மனுதாரர் இம்மனுவில் ஒப்புக்கொள்ளும் சங்கதிகளை தவிர மற்றவைகளை மனுதாரர்/வாதியே Strict ஆக ருசு செய்யவேண்டியது. பேரா 2ல் " 6 முதல் 8 பிரதிவாதிகள் மேற்படி வழக்கில் formal தரப்பினராக சேர்க்கப்பட்டுள்ளார்கள் என கூறுவது பொய், உண்மைக்கு புறம்பானவை மேற்படி 6 முதல் 8 பிரதிவாதிகள் மேற்படி வழக்கில் அவசிய தரப்பினர்கள் ஆவார்கள். மேலும் மேற்படி 6ம் பிரதிவாதி எந்த தேதியில் இறந்தார் என மனுதாரர் தனது மனுவில் குறிப்பிடவில்லை. மேற்படி மனுதாரர்/வாதி தனது மனுவில் " வாரிசுகள் என தீர்மானித்தபிறகு மேற்படி வழக்கில் 6ம் பிரதிவாதியின் சட்டபடியான வாரிசுகளை மேற்படி வழக்கில் சேர்க்க சட்டப்படி கட்டளை 22, விதி 4 சி.பி.சி.ன் படி தாக்கல் செய்யவேண்டுமே தவிர கட்டளை 1 விதி 10 சி.பி.சி.ன் படி மனு தாக்கல் செய்ய சட்டத்தில் வழிவகையில்லை. எனவே மனுதாரரின் மனுவினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்வேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்துள்ளார்.

4. இம்மனுவில் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சனையில் உள்ள சங்கதி என்னவென்றால், இம்மனு அனுமதிக்கத்தக்தா? இல்லையா? என்பதே ஆகும்.

5. **பிரச்சனைக்கான தீர்வு:-**

இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. மனுதாரர், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாய்மொழி சாட்சியம் இல்லை. இருதரப்பிலும் ஆவணங்கள் இல்லை. அசல் வழக்கானது தாவா 'D' அட்டவணை சொத்தை பொறுத்து விளம்புகை பரிகாரமும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும் 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கில் கோரப்பட்டுள்ளது. 6 முதல் 8 பிரதிவாதிகள் அசல் வழக்கில் உரிய தரப்பினர்களாக (formal party) என்ற அடிப்படையில் சேர்க்கப்பட்டுள்ளார்கள். இந்த வழக்கின் அழைப்பாணை 6ம் பிரதிவாதிக்கு அனுப்பப்பட்ட நிலையில், அவர் இறந்துவிட்டதாக அழைப்பாணை திரும்பி விட்டது. இறந்த 6ம் பிரதிவாதியின் மகன்களான இம்மனுவில் குறிப்பிட்டுள்ள 9 மற்றும் 10 எதிர்மனுதாரர்கள் 6ம் பிரதிவாதி வாங்கி சொத்தை அனுபவம் செய்து வருகிறார்கள். அவர்களை அசல் வழக்கில் தரப்பினராக சேர்க்க இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6. 1ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனுவிற்கான எதிருரையை 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள் ஏற்றுக்கொண்டுள்ளார்கள். அந்த எதிருரையில், 6ம் பிரதிவாதி சிந்தாமணி 08.09.2021ல் இறந்துவிட்டார். அவருடைய சட்டப்படியான வாரிசு மனு போடாமல் அவருடைய வாரிசுகளை 9, 10 பிரதிவாதிகளாக

சேர்க்கவேண்டும் என்று தாக்கல் செய்துள்ள மனு ஏற்புடையதல்ல. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே 6ம் பிரதிவாதி இறந்துள்ளார் என்ற விவரம் தெரிந்தும் அவர் மீது தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு செல்லாத ஒன்றாகும். 6ம் பிரதிவாதியின் வாரிசுகளை குறிப்பிட்ட காலத்திற்குள் சேர்க்காமல் விட்டுவிட்டு தற்போது குறுக்கு வழியில் வழக்கில் தரப்பினராக சேர்க்க கட்டளை 1 விதி 10 சி.பி.சி.ன் படி தாக்கல் செய்துள்ள மனு ஏற்புடையதல்ல. வழக்கை நடத்தவிடாமல் செய்யவேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் தாக்கல் செய்யப்பட்ட இம்மனு ஏற்புடையதல்ல என்று எதிருரை தாக்கல் செய்து எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது.

7. 8ம் எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையில், 6ம் பிரதிவாதி இறந்துவிட்ட நிலையில் அவரது வாரிசுகளை கட்டளை 22 விதி 4ன் கீழ் சேர்க்க மனு தாக்கல் செய்யாமல் கட்டளை 1 விதி 10ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனு ஏற்புடையதல்ல. 6ம் பிரதிவாதி எப்போது இறந்தார் என்று மனுவில் குறிப்பிடவில்லை. 6ம் பிரதிவாதியின் வாரிசுகள் சேகர் மற்றும் ஆனந்தன் என்று குறிப்பிட்டுள்ள நிலையில், அவர்களை வழக்கில் சேர்க்க கட்டளை 22 விதி 4ன் கீழ் தான் மனு தாக்கல் செய்யவேண்டும், கட்டளை 1 விதி 10 ன் கீழ் மனு தாக்கல் செய்யமுடியாது என்று கூறி எதிருரை தாக்கல் செய்து எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது.

8. அசல் வழக்கு விளம்புகை பரிகாரம் வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் உள்ள 6ம் பிரதிவாதிக்கு அனுப்பப்பட்ட அழைப்பாணை 6ம் பிரதிவாதி வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே இறந்துவிட்டதாக திரும்பி விட்டது. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு பிரதிவாதி இறந்திருந்தால், அவரது வாரிசுகளை சேர்க்க உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 1 விதி 10ன் கீழ் தான் மனு தாக்கல் செய்யமுடியும், வழக்கு நிலுவையில் இருக்கும்போது பிரதிவாதி இறந்தால், கட்டளை 22 விதி 4ன் கீழ் மனு தாக்கல் செய்யமுடியும். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே 6ம் பிரதிவாதி இறந்துள்ளதால், கட்டளை 1 விதி 10ன் கீழ் அவரது வாரிசுகளை சேர்க்க இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பே பிரதிவாதி இறந்திருந்தால், அவரது வாரிசுகளை கட்டளை 1 விதி 10 ன் கீழ் அனுமதி பெற்று சேர்க்கலாம் என்று மாண்புமிகு உச்ச நீதிமன்றம் 2017 180 AIC 177, Pankajbhai Rameshbhai Zalavadia -Versus- Jethabhai Kalabhai Zalavadiya (Deceased) Throught LRs & Ors என்ற வழக்கில் தீர்வு காணப்பட்டுள்ளது. மேற்படி முன் தீர்ப்பின் அடிப்படையில், வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு இறந்துபோன 6ம் பிரதிவாதியின் வாரிசுகளான இம்மனுவில் குறிப்பிட்டுள்ள 9 மற்றும் 10 எதிர்மனுதாரர்களை அசல் வழக்கில் தரப்பினராக சேர்க்க தாக்கல் செய்துள்ள இம்மனுவை அனுமதிக்கவேண்டும் என்று மனுதாரர் தரப்பில் வாதம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி முன்தீர்ப்பு இம்மனுவிற்கு ஆதரவாக உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு 6ம் பிரதிவாதி இறந்துள்ளதால், அவரின் வாரிசுகளான 9 மற்றும் 10 எதிர்மனுதாரர்களை அசல்

வழக்கில் தரப்பினராக சேர்க்க தாக்கல் செய்திருக்கும் இம்மனு அனுமதிக்கப்படுகிறது.

**முடிவாக,** இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை குறித்து உத்தரவு இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 1ம் நாளாகிய இன்று என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

BASKARAN S Digitally signed by BASKARAN S Date: 2025.12.01 17:32:44 +0530

சார்பு நீதிபதி,

ஆரணி.

<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:–</u> இல்லை

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றிவணங்கள்:–</u> இல்லை

BASKARAN S Digitally signed by BASKARAN S Date: 2025.12.01 17:32:51 +0530

சார்பு நீதிபதி,

ஆரணி.